

தேனி மாவட்டம், மேகமலை–மணலார் பகுதியில் நேற்று முன்தினம் (02.09.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தில் அதிகமாக கர்ப்பங்கள் நிகழும் 24 வட்டாரங்களில் தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்) ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

### உச்சநீதிமன்றத் தீர்ப்பு: ஆசிரியர்களை அரசு கைவிடாது என்ற

# அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு வரவேற்கத்தக்கது!

## அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு தலைவர் சா.அருணன் அறிக்கை!

*சென்னை, செப். 4 -*

ஆசிரியர் நியமனம் மற்றும் பதவி உயர்விற்கு தகுதித் தேர்வு கட்டாயம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய நிலையில் ஆசிரியர்களை தமிழ்நாடு அரசு கை விடாது என அறிவித்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்களின் அறிவிப்பை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் - சா.அருணன் - வரவேற்றுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு :-

2011ஆம் ஆண்டு கட்டாய கல்வி உரிமை சட்டத்தை கொண்டு வந்து இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தகுதித் தேர்வு கட்டாயம் என விதியை உருவாக்கி ஆசிரியர் தேர்வு ஆணையத்தின் மூலம் ஆசிரியர் தகுதி தேர்வு அடிப்படையிலேயே பணி நியமனம் நடைபெற்று வந்த நிலையில் பிறகு உச்சநீதி மன்ற உத்தரவு அடிப்படையில் தகுதி தேர்வில் மட்டும் தேர்ச்சியடைந்தால் போதாது போட்டித் தேர்விலும் தேர்ச்சி அடை வேண்டும் என்று அறிவித்து தகுதி தேர்வு மற்றும் போட்டித் தேர்வின் அடிப்படையில் ஆசிரியர்களை நியமித்து வருகின்றனர்.

கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் அடிப்படையில் பதவி உயர்விற்கும் தகுதி தேர்வு அவசியம் என தகுதி தேர்வில் தேர்ச்சி வெற்றி பெற்று பணி நியமனம் பெற்ற ஆசிரியர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.அதன் இறுதி தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது 2011 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு கட்டாய கல்வி உரிமை சட்டத்தில் நடைமுறையில் உள்ளவாறு ஆசிரியர் பணிக்கும் பதவி உயர்விற்கும் தகுதி தேர்வு கட்டாயம் என்று தீர்ப்பு வழங்கி இருக்கிறது. இதனால் லட்சக்கணக்கான ஆசிரியர்கள் பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். தகுதி தேர்வு இல்லாமல் பணியாற்றும் ஆசிரியர்கள் ஒய்வு பெற ஐந்து வருடத்திற்குள் இருப்பவர்களுக்கு தகுதி தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஐந்து வருத்திற்கு மேல் இருந்தால் இரண்டு வருடத்திற்குள் தகுதி தேர்வில் தேர்ச்சி அடைந்தால் மட்டுமே பணி தொடர முடியும் என்றும் அறிவித்து தேர்வில் தேர்ச்சி அடையாத பட்சத்தில் கட்டாய விடுப்பு வழங்கி ஒய்வூதிய பலன்கள் அனைத்தும் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 2004ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் எல்காட் மூலமாக சுமார் 1800 கணினி ஆசிரியர்களை மாதம் ரூ . 6000 தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு பணியாற்றினர். பின்பு 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கணினி ஆசிரியர்களை கைவிட கூடாது என எண்ணி கணினி ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய முடிவெடுத்து அதாவது நேரடியாக நியமனம் செய்ய வழி வகையில்லை. ஆதலால் ஆசிரியர் தேர்வாணையம் மூலமாக தேர்வு நடத்தியே பணி நியமனம் செய்ய முடியும் என்ற நிலையை அறிந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அவர்களுக்குள்ளாக ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலமாக தேர்வை நடத்தி அனைவரையும் பணி நிரந்தரம் செய்து அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி அழகு பார்த்தார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

மேலும் 2003ஆம் ஆண்டு புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை அப்போதைய அதிமுக அரசு கொண்டு வந்து ஒட்டு மொத்த அரசு ஊழியர்களை வஞ்சித்தது பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் கொண்டு வர அப்போது காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்ட 1.5 லட்சம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை பணியிடை நீக்கம் செய்தனர். வேலைநிறுத்த போராட்டத்தை நசுக்க 15000 இளநிலை உதவியாளர்களை வேலைவாய்ப்பு அலுவலக மூலமாக பதிவு மூப்பு அடிப்படையில் மாதம் ரூ. 4000 தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்தனர் பின்பு பணி நிரந்தரம் செய்ய கோரியும் நிரந்தரம் செய்யவில்லை. பின் 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 15000 இளநிலை உதவியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்தார். அப்போது இளநிலை உதவியாளர் நியமனம் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தான் நியமனம் செய்ய வேண்டும் என்று வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றமும் தேர்வாணையத்தின் மூலமாக மட்டும் நியமனம் செய்ய முடியும் என தீர்ப்பளித்தது , இவர்கள் வாழ்வு கேள்வி குறியாகுமே என்ற உயரிய எண்ணம் வைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இவர்கள் அதிமுக ஆட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் தானே என்ற எண்ணம் வைக்காமல் தேர்வாணையத்தின் மூலமாக தானே நியமிக்க வேண்டும் என்று கூறி 15000 இளநிலை உதவியாளர்களுக்கு உள்ளாக தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தேர்வு நடத்தி அனைவரையும் பணி நிரந்தரம் செய்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் காவலர் என்பதை நிரூபித்து காட்டினார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

இதே நிலையில் இன்று உச்ச நீதிமன்றம் ஆசிரியர்கள் பணி நியமனம் மற்றும் பதவி உயர்விற்கு தகுதித் தேர்வில் தேர்ச்சி கட்டாயம் என தீர்ப்பு வழங்கி உள்ளது. இந்த உத்தரவு ஒட்டு மொத்த ஆசிரியர்களுக்கு அதிர்ச்சியை தந்து உள்ளனர்.

இந்நிலையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மறுவுருவம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆசிரியர்களை கை விடமாட்டார் என்று தெரிவித்து இருப்பதை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு வரவேற்கிறது. இந்த அறிவிப்பு ஏற்கனவே இளநிலை உதவியாளர் பணி நிரந்தரம் கணினி ஆசிரியர்கள் பணி நிறந்தரம் உறித்த முடிவை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் எவ்வாறு கையாண்டாரோ அந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் கையாளுவார் என்ற நம்பிக்கையோடு ஆசிரியர் சமுதாயம் உள்ளது.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கரூரில் வருகின்ற செப்டம்பர் 17 அன்று நடைபெறவிருக்கும் கழகத்தின் கொள்கை திருவிழாவாம், தி.மு.க. முப்பெரும் விழாவிற்கான பணிகளை கரூர் கோடாங்கிபட்டியில் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வேலைவாய்ப்பு வழங்குவதில் 15.24 % பங்களிப்புடன் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடம்!

# திராவிட மாடல் அரசின் சாதனைகளில் மற்றுமொரு சிகரம்!

மாண்புமிகு தமிழ்நாட்டில் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு 4 ஆண்டுகளில் எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான திட்டங்கள் பலவற்றை தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ளது. அவற்றினால் எட்டப்பட்ட பலன்கள் என்னவென்பதை ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களே அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றன.



தமிழ்நாட்டை இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலமாக உயர்த்த வேண்டும் எனும் இலட்சிய உறுதியோடு செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஒவ்வொருத்துறையிலும் அந்த உயரத்தை எட்டி சாதனைப் படைத்து வருகிறது.

14 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 11.19 விழுக்காடு எனும் இரட்டை இலக்க வளர்ச்சியை எட்ட வைத்து இந்தியாவிலேயே முதன்மை பொருளாதாரமாக உயர்த்தியது திராவிட மாடல் அரசு.

அதன் தொடர்ச்சியில் இப்போது தொழிற்துறை வேலை வாய்ப்புகளை வழங்குவதில் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பிடித்து மகத்தான சாதனையை நிகழ்த்தியிருக்கிறது தமிழ்நாடு;ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள 2023-24 நிதியாண்டுக்கான வருடாந்திர தொழில் கணக்கெடுப்பு (ASI) முடிவுகளில் 15.24 விழுக்காடு பங்களிப்புடன் நாட்டிலேயே வேலைவாய்ப்பு வழங்குவதில் முதலிடத்தைப் பிடித்துச் சாதனைப் படைத்திருக்கிறது தமிழ்நாடு.



**சைதை சாதிக்**
**தலைமைக் கழகப் பேச்சாளர்**

தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14வது இடத்தில் இருந்த தமிழ்நாடு 2வது இடத்துக்கு திராவிட மாடல் ஆட்சியில் முன்னேறி உள்ளது.

ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24% இருக்கும்போது, தமிழ்நாட்டின் வளர்ச்சியானது 8.19% உயர்ந்துள்ளது.

இந்திய அளவில் பணவீக்கமானது 6.65% இருக்கும் போது, தமிழ்நாட்டில் அது 5.97% குறைந்து உள்ளது.

ஒன்றிய அரசின் ஆய்வறிக்கையில் குஜராத் மாநிலம் இரண்டாவது இடத்தையும், மகாராஷ்டிரா மூன்றாவது இடத்தையும், உத்தரப்பிரதேசம் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளன.

நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் 15.43 விழுக்காடு அளவு தமிழ்நாட்டில்தான் உள்ளன; தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடே இந்தியாவில் முதலிடத்தைப் பிடித்துச் சாதனைப் படைத்திருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிக்காட்டலில் தமிழ்நாட்டில் சிறப்பாகக் கையாளப்படும் சட்டம் ஒழுங்கு, தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர் களுக்கு வழங்கப்படும் சலுகைகள், விரைவான, எளிதான ஒப்புதல்கள் , அரசின் பல்வேறு திட்டங்களின் வழி சிறப்பாக வளர்த்தெடுக்கப்படும் திறன்மிக்க மனித வளம் ஆகியவையே இந்தச் சாதனைக்கு அடித்தளமாகியிருக்கின்றன.

ஒன்றிய அரசு அரசியல்ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் எத்தனையோ தடைகளைத் தமிழ்நாடு அரசிற்கு ஏற்படுத்தினாலும் அத்தனை தடைகளையும் தாண்டி தமிழ்நாட்டையும் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் தனது கடும் உழைப்பால் நாட்டிலேயே முதலிடத்திற்கு உயர்த்தி மகத்தான சாதனைப் படைத்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

அந்தவகையில் 2024-25 நிதியாண்டில் தமிழ்நாட்டின் மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சி, 9.69% என அதிகரித்துள்ளது. தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட 8% வளர்ச்சி, மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் ஆய்வறிக்கையில் உத்தேசிக்கப்பட்ட 9.3% வளர்ச்சி ஆகியவற்றை விடவும் அதிகமான வளர்ச்சியை தமிழ்நாடு எட்டியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு எட்டியிராத அதிகபட்ச வளர்ச்சி என்பது மட்டுமல்ல, இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியை இந்த ஆண்டு பதிவு செய்திருப்பது தமிழ்நாடுதான். குறிப்பாக சேவைகள் துறை 12.7%, இரண்டாம் நிலை துறைகள் 9% வளர்ச்சி கண்டுள்ளன. ஒன்றியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் குஜராத், பீகார், உத்தரப் பிரதேச மாநிலங்கள், தங்கள் மாநிலங்களின் 2024-25ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி வீதத் தரவுகளையே இன்னும் பதிவு செய்யவில்லை.

இந்த வளர்ச்சியை தமிழ்நாடு எந்த சூழலுக்கு மத்தியில் எட்டியுள்ளது என்பதும் நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று. வரிப்பகிர்வில் ஒன்றிய அரசு இழைத்த அநீதியால் 4% வருவாயை இழந்திருக்கிறது தமிழ்நாடு. ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் பங்கெடுக்கும் திட்டங்களில் ஒன்றிய அரசின் பங்கை தொடர்ந்து குறைத்துக் கொண்டே வருகிறது பாஜக அரசு. உதவி மானியங்களில் தமிழ்நாடு 2.09% வீழ்ச்சியை கண்டிருக்கிறது. ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகை 3 ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டு விட்டது. புயல் நிவாரண நிதியாக தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்துள்ள 37,000 கோடி ரூபாயில் இதுவரை ஒரு ரூபாய் கூட விடுவிக்கப்படவில்லை.

இந்த ஆண்டு ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டின் பெயர் கூட அதில் இடம்பெறவில்லை. மற்ற பெரிய திட்டங்கள் எதையும் தமிழ்நாடு மோடி ஆட்சியிடம் இருந்து பெறவில்லை. மதுரை எய்ம்ஸ் மட்டும் ஒற்றைச் செங்கல்லை நட்டு வைத்ததுடன் நிற்கிறது. மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான நிதியில் 4,000 கோடி ரூபாய்க்கு மேல் நிலுவைத்தொகை உள்ளது. கல்வி திட்டத்திற்கான நிதியில் 2,152 கோடி ரூபாய் நிலுவைத்தொகை உள்ளது.

இதைத்தாண்டி தமிழ்நாடு அல்லது மற்ற எதிர்க்கட்சி மாநிலங்கள் பெரும் முயற்சி எடுத்து ஈர்க்கும் முதலீடுகளையும் குஜராத், உத்தரப் பிரதேசத்திற்கு திசைதிருப்பும் சூழ்ச்சிகளும் கடந்த சில ஆண்டுகளில் நடந்திருக்கின்றன. ஒன்றிய அரசின் இத்தனை வஞ்சனைகளையும் கடந்து தமிழ்நாடு இந்த பெரும் வளர்ச்சியை கண்டிருக்கிறது என்பதுதான் குறிப்பிடத்தக்க சாதனை.

அதேபோல, தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சீரழிந்து விட்டது என்ற அவதூறு பரப்புரையும் இதன்மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது. எங்கே அமைதி நிலவுகிறதோ, எங்கே உட்கட்டமைப்பு வசதிகள் பலமாக இருக்கிறோ, எங்கே அரசின் ஒத்துழைப்பு சிறப்பாக இருக்கிறதோ, அங்கேதான் முதலீடு செய்ய எந்த நிறுவனங்களும் விரும்பும். தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு மோசமாக இருக்கிறது என்று வைக்கப்படும் விமர்சனங்கள் உண்மையாக இருந்தால் இந்த வளர்ச்சி எப்படிச் சாத்தியமாகும் என்ற கேள்வியும் எழுகிறது.

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு முன்பை விட சிறப்பாக இருக்கிறது, அதனால்தான் வளர்ச்சி அதிகரித்திருக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சமீபத்தில் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின் அடிப்படையில், தமிழ்நாடு காவல்துறை இதுதொடர்பான புள்ளி விவரங்களை வெளியிட்டிருந்தது. அதன்படி பார்த்தால் 2019ஆம் ஆண்டை விட குற்றங்கள் படிப்படியாகக் குறைந்து உள்ளது. அதேபோல இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பாக பெருநகரம் சென்னைதான் என்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

அதேசமயத்தில் சாமியார் ஆதித்யநாத்தின் ஆட்சியில் உத்தரப் பிரதேசத்தின் சட்டம் ஒழுங்கு ஒட்டுமொத்தமாக சீர்குலைந்து விட்டதாக உச்சநீதிமன்றமே கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது. பாஜக ஆளும் பல மாநிலங்களில் மதவெறி தலைவிரித்தாடுகிறது. ஆனால் தமிழ்நாட்டு பாஜகவினரோ, அவர்கள் ஆளும் மாநிலங்களின் வளர்ச்சியைப் பற்றியோ, சட்டம் ஒழுங்கு பற்றியோ பேசாமல் அல்லது கவலைப்படாமல் தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்தும், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு குறித்தும் தரமற்ற விமர்சனங்களை வைக்கின்றனர். அந்த விமர்சனங்கள் அனைத்தையும் தவிடுபொடியாக்கி இந்தியாவின் நம்பர் ஒன் மாநிலமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு.



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தருவதையொட்டி தளி சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் பேளகொண்டப்பள்ளியில் மாவட்டச் செயலாளர் ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமையில் ஆலோசனை மேற்கொண்டார். உடன் ஒன்றிய செயலாளரும் முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான சீனிவாசலு ரெட்டி, ஒன்றிய செயலாளர்கள் திவாகர், ராஜா, ஸ்ரீதர் சீனிவாசன் தஸ்தகீர், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் சந்திரப்பா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.